DMC,JMCOURT,KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 287 /2025 , Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கலைசெல்வன் | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | துரைசாமி | Calling | : | தலைமை காவலர் |
| Village | : | அரும்பாவூர் காவல் நிலையம் | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 43/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.07.2026. | | | | | |

எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது அரும்பாவூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 16.07.2025 ம் தேதி அன்று மங்களமேடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக நானும் என்னுடன் தலைமைகாவலர் குணசீலன் என்பவரும், உதவி ஆய்வாளராக திரு. விநாயகம் என்பவருடன் பணியில் இருந்தோம். அன்றைய தினம் மங்களமேடு காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட சு,ஆடுதுறை ரோடு, அண்ணாநகர் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது, எங்களை பார்த்ததும் தப்பியோட முயன்ற 73 வயதுள்ள ஒரு ஆண் நபரை பிடித்து விசாரணை செய்தபோது அவரிடம், 180 ML அளவுகொண்ட Monitor Brandy பாட்டில்கள் 27 இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது தன்னுடைய பெயர் மாணிக்கம் என்றும், தனது தந்தை பெயர் பொன்னுசாமி என்றும், அரசு மதுபானக்கடையில் சிறுக சிறுக மேற்கண்ட பாட்டில்களை வாங்கி கடை மூடிய பின்னர் அதிக லாபத்திற்கு சில்லறை விற்பனை செய்வதாக சொன்னவரை காரணம் கூறி கைது செய்து, என் முன்னிலையிலும் தலைமை காவலர் முன்னிலையிலும், உதவி ஆய்வாளர் மேற்கண்ட வழக்கு சொத்தினை கைப்பற்றி பின்னர் உரிய வழிகாட்டுதலை பின்பற்றி மேற்கண்ட வழக்கு சொத்தினை எங்கள் முன்னிலையில் அழித்தும் மகசர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகசரில் நான் கையொப்பம் செய்துள்ளேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து உரிய சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்ற நாள் குறித்து பொதுநாட்குறிப்பேட்டினை உதவி ஆய்வாளர் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அது பொது சந்தையில் எளிதாக கிடைக்கும் என்பதாலும், புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்பதால் அங்கு உள்ள நபர்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் முன்னிலையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**–இல்லை

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC, MUNSIF COURT, KUNNAM

DMCJMCOURTKUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 287/2025 , Mangalamedu P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கலியமூர்த்தி | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | ஆறுமுகம் | Calling | : | உதவி ஆய்வாளர் |
| Village | : | மங்களமேடு காவல் நிலையம் | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 60/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.07.2026. | | | | | |

எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

1. நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 16.07.2025 ம் தேதி அன்று குன்னம் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக அ.சா.1 ம் அவருடன் தலைமை காவலர் குணசீலன் என்பவரும், உதவி ஆய்வாளராக திரு. விநாயகம் என்பவருடன் பணியில் இருந்தார்கள். மேற்படி திரு. விநாயகம் வேறு காவல் நிலையத்தில் பணி செய்து வருகிறார் என்பதாலும், அவருக்காக நான் கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். அன்றைய தினம் மங்களமேடு காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியான சு.ஆடுதுறை ரோடு, அண்ணாநகர் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது, போலிசாரை பார்த்து தப்பியோட முயன்ற 73 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபரை பிடித்து சோதனை செய்தபோது 180 ML அளவுகொண்ட Monitor Brandy பாட்டில்கள் 27 இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது தன்னுடைய பெயர் மாணிக்கம் என்றும், தனது தந்தை பெயர் பொன்னுசாமி என்றும், அரசு மதுபானக்கடையில் சிறுக சிறுக மேற்கண்ட பாட்டில்களை வாங்கி கடை மூடிய பின்னர் அதிக லாபத்திற்கு சில்லறை விற்பனை செய்வதாக சொன்னவரை காரணம் கூறி கைது செய்து, அ.சா.1 முன்னிலையிலும் தலைமை காவலர் முன்னிலையிலும், உதவி ஆய்வாளர் மேற்கண்ட வழக்கு சொத்தினை கைப்பற்றி பின்னர் உரிய வழிகாட்டுதலை பின்பற்றி மேற்கண்ட வழக்கு சொத்தினை அழித்து அழித்தல் மகசர் தயார்

செய்துள்ளார். எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 286/2025, பிரிவு 4(1)(c) TNP (Amendment) 2024 ன் படி குற்றமென முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியை உரிய வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். மேற்கண்ட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கடந்த 16.07.2025 ம் தேதி அன்று 4(1)(c) TNP (Amendment) 2024 ன்படி குற்றமென இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்ற நாள் குறித்து பொதுநாட்குறிப்பேட்டினை உதவி ஆய்வாளர் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அது பொது சந்தையில் எளிதாக கிடைக்கும் என்பதாலும், புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்பதால் அங்கு உள்ள நபர்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் முன்னிலையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**–இல்லை

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC CUM COURT, KUNNAM